7th July 1962]

*186-E Q.—Sri C. SRINIVASAN: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether there is any proposal to start a polytechnic in Paramakudi taluk; and

(b) if so, where it will be located?

The Hon. Sri R. VENKATARAMAN: (a) No Sir.

(b) Does not arise.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: திருச்சியில் நிறுவ இருக்கும் ரீஜினல் என்ஜினியரிங் கல்லூரி, புதிதாக நிறுவ இருக்கும் இரண்டு என்ஜினியரிங் கல்லூரிகள் இவைகள் எந்த வருடம் ஆரம்பிக்கப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: ரீஜனல் என்ஜினியரிங் காலேஜுக்கு வேண்டிய நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு இப்பொழுது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் கட்டிடம் எல்லாம் கட்டித்தான் காலேஜ் ஆரம்பிக்க முடியும். வேறு இடத்தில் காலேஜ் ஆரம்பித்துவிட்டு பிறகு அந்தக் கட்டிடத்திற்குப் போகவேண்டுமென்ற எண்ணம் இப்பொழுது இல்லை. அதே போல் சேலத்திலும் கட்டிடம் கட்டி காலேஜ் ஆரம்பிக்கவேண்டுமென்று இருக்கிறது. திருநெல்வேலியில் தனியார் துறையில் வைக்கிற காலேஜுக்கும் அவர்கள் கட்டிடங்கள் கட்ட ஏற்பாடுகள் செய்யவேண்டும். அதன்பிறகுதான் காலேஜ் ஆரம்பிக்கப்படும்.

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சேலம் பொறியியல் கல்லூரிக்கு 100 ரூபாய் மட்டும் ஒதுக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த ஆண்டு அதிக ரூபாய் ஒதுக்கினால்தானே இடைகால பட்ஜெட்டில் சொன்னதைப்போல் அடுத்த வருடத்திலாவது இந்தக் கல்லூரி ஆரம்பிக்க முடியும்.

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: 100 ரூபாயில் என்ஜினியரிங் காலேஜ் வைக்க முடியாது. அது டோக்கன் கிரான்ட். எவ்வளவு செலவானாலும் 100 ரூபாய் டோக்கன் கிரான்டை வைத்து செலவழிக்கலாம்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: திருநெல்வேலியில் தனியார் துறையில் என்ஜினியரிங் காலேஜ் ஆரம்பிக்க விண்ணப்பித்திருக்கக் கூடியவர்கள் யார்? அதற்குள்ள இடவசதி தேடப்பட்டுவிட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: யார் என்பதைப்பற்றிக் கவலையில்லை. அங்கு என்ஜினியரிங் காலேஜ் வருவது என்பதுதான் முக்கியமானது.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: திருச்சியில் கொதி கனல் தொழிற்சாலை ஏற்படுத்த இருக்கிற இந்த நேரத்தில் உடனடியாக என்ஜினியரிங் கல்லூரி ஆரம்பித்தால் உதவியாக யிருக்காதா?

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: என்ஜினியரிங் காலேஜை திறந்தவெளியில் ஆரம்பிக்க முடியாது. அதற்காகத்தான் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம்.

[7th July 1962

திரு. மீ. கல்யாணசுந்தரம்: ஸார், சேலம் ஜில்லாவில் அரசாங்கத் துறையில், ஆரம்பிக்க இருக்கும் கல்லூரி எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும்? அதற்கான இடத்தை ஆர்ஜிதம் செய்தாகிவிட்டதா? இல்லையென்றால் எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: இடம் இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

Junior technical schools

* 186-F *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of junior technical schools together with admission capacity;

(*b*) whether there is any proposal to increase the number of schools; and

(*c*) if so, the details thereof?
in each.

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Five junior technical Schools have been started with an intake of 60 students in each.

(*b*) Yes, Sir.

(*c*) Four more junior technical schools are proposed to be opened during 1962–63. They will be attached to the Government polytechnics at Vellore and Nagercoil, and to the Sankar Institute of Polytechnic at Talaiyuthu and the Annamalai Polytechnic at Chettinad. There is provision for opening 11 more junior technical schools during the Third Plan.

* 186-G *Q.*—SRI M. WILLIAM: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start a junior technical school at Marthandam, where an Industrial estate has been established?

THE HON. SRI R. VENKATARAMAN: No, Sir.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: இதில் பயிற்சி அளிக்கப்படும் மாணவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதி என்ன?

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: இதற்கு எட்டாவதுவரை படித்திருந்தால் போதும். எட்டாவது வரை படித்தவர்கள் இதில் வந்து சேரும்போது தொழிற்கல்வியும், ஹைஸ்கூலில் படிக்க வேண்டிய படிப்பையும் படித்துக் கொள்வதற்கு வசதியாக இந்தப் பயிற்சி ஆரம்பிக்கப்படும்.

திரு. கே. மூக்கையாத் தேவர்: ஜூனியர் பாலிடெக்னிக் ஆரம்பித்த நாளிலிருந்து இதற்குச் சேரவேண்டியவர்களுக்குத் தகுதி என்ன என்பதைச் சரியாக தீர்மானம் செய்யப்படாததின் காரணமாக கழிந்த இரண்டு வருடங்களாகப் பலவிதமான குழப்பங்கள் இருந்துகொண்டு வருகின்றன. முதலில் நான்காவது